சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,
(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்,
சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590

**ஆணை நாள்: 05.01.2022**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA6208/F/2020**

**திரு. M. சதாசிவம் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**குன்றத்தூர் வட்டம்,**
**காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **11.01.2020** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **06.07.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **12.08.2020** |

******

## ஆணை

இவ்வழக்கு COVID-19 ஊரடங்கு காரணமாக (05.01.2022) அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு மு. சதாசிவம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 11.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்ட படப்பை கிராமம் சர்வே எண் 425/2 D3க்கு 745ல் கைப்பிரிதி

சிட்டாவில் பாப்பாத்தி அம்மாள் என்ற பெயர் சேர்க்கப்பட்டு பட்டா மாற்றம் செய்துள்ளது தொடர்பாக 09.12.2019 அன்று மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கொடுத்த புகார் மனு தொடர்பாக தகவல்கள் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரும், மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தினால், மேல்முறையீட்டாளர் 06.07.2020 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினையும், 12.08.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளர் மீண்டும் 22.06.2021 மற்றும் 23.10.2021 நாளிட்ட நினைவூட்டு மனுக்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் நினைவூட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு 05.01.2022 முற்பகல் அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் பொதுத் தகவல் அலுவலர் பட்டா மாறுதல் தொடர்பாக கூறிய கருத்தை ஏற்று, தான் கோரிய முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்குவதாக உறுதியளித்தார் எனவும், தான் அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்வதாகவும் ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய பட்டா மாறுதல் குறித்த தகவல்களை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு, அவ்வறிக்கையின்படி கூடிய விரைவில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்களை வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் மேல்முறையீட்டாளரை தான் தொடர்பு கொண்டு இந்த கருத்தை தெரிவித்ததாகவும், மேல்முறையீட்டாளரும் இதனை ஏற்றுக் கொண்டதாகவும், ஆணையத்தில் தெரிவித்தார்.

6. வாத பிரதிவாதங்களின்படி, மேல்முறையீட்டாளரின் கூற்றிற்கிணங்க முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்வதாக ஒப்புதல் அளித்ததன் பேரில், இவ்வழக்கில் மேலும் விசாரணை செய்ய எந்த முகாந்திரமும் இல்லையெனக் கருதி இவ்வழக்கு முற்றாக்கம் செய்யபடுகிறது.

**ஒம்/- (ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவி பதிவாளர்

**வழக்கு எண் . SA6208/F/2020**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு. M. சதாசிவம், த/பெ முருகாண்டை,
25, விஜயலட்சுமி பண்டிட் 2வது தெரு,
அனகாபுத்தூர், சென்னை - 600 070.

*Copy to: Judgement File/ Spare.*
*JE/PA-06/01/2022*